1978 செப்டம்பர் 2]

## தருமபுரி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை

* வினா எண் 58—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஆம்; தினமும் 10 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் திறனுடைய பால் பவுடர் தொழிற்சாலை ஒன்றை வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் அமைக்க உத்தேசிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே, நீர் வளமும் நில வளமும், பால் பெருக்கமும் அதிகமாக உள்ள மாவட்டத்தின் மையப் பகுதியில் அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? எந்த இடத்தில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, அந்தத் திட்டத்தை அமல்படுத்துகின்றபோது, அது விவசாயிகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் பயன்படும் வகையில் ஒரு நல்ல இடத்தில்தான் அமைக்கப்படும். அந்த நல்ல இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ரா. மார்க்கபந்து:** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஜோலார்பேட்டையில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படுவதாக இருந்தது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து அதற்குத் தனிக் கேள்வி போடவும். நீங்கள் கேட்கிற கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

**திரு கா. அப்புனு கவுண்டர்:** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் பால் பவுடர் தொழிற்சாலையின் மதிப்பீடு எவ்வளவு? அங்கே எவ்வளவு பால் பவுடர் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது?

[1978 செப்டம்பர் 2

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 10 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டால் அதனால் ஒரு லட்சம் லிட்டர் பாலை வாங்கி, பதப்படுத்தி அனுப்பி வைக்கின்ற நிலைமை உருவாகும். அதனால் 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

### ஓசூர் கால்நடைப் பண்ணை

* வினா எண் 59—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் மத்தகிரியிலிருக்கும் ஓசூர் கால் நடைப் பண்ணையை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தருமபுரி மாவட்டம் மத்தகிரியில் இருக்கும் ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையை விரிவாக்கும் திட்டம் எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அந்த கால்நடைப் பண்ணையின் சுற்றமைப்பில் பிரிட்டிஷ் அரசு உதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒன்று தோற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த ஓசூர் கால் நடைப் பண்ணையின் மொத்தப் பரப்பு என்ன? அங்கே என் னென்ன உயர் இன மாட்டினங்கள், ஆட்டினங்களை உருவாக்க திட்டமிடப்பட்டிருக்கிறது? அமைச்சரவர்கள் பிரிட்டிஷ் அரசு உதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒன்றை அறி வித்தார்கள். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஏதாவது குழு அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர் களே, ஓசூர் கால்நடைப் பண்ணையின் பரப்பு 1946.41 ஏக்கர். அங்கே திட்டமிடப்பட்டிருக்கின்ற உயர் இன மாட்டினங்களைப் பற்றியும் ஆட்டினங்களைப் பற்றியும் கேட்டார்கள். சிந்தி, ஜெர்சி உயரினம், பிரீசியன் உயரினம், ரெட்டேன் உயரினம், கலப்பினம், கிர், ஹலிகார், ஆலம்பாடி, தார்பார்கர்—இவை